

பெரம்பலூர் மாவட்டத்தில், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், 400 கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழாவினை நடத்தி வைத்து வாழ்த்தினார். இதில் மாவட்ட ஆட்சியர் கிரேஸ் பச்சாவ், கே.என்.அருண்நேரு.எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம் பிரபாகரன், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், நகராட்சி தலைவர் அம்பிகா ராஜேந்திரன், துணைத் தலைவர் து.ஆதவன்(எ)ஹரி பாஸ்கர், ஒன்றிய கழகச் செயலாளர் எம்.ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில்

# அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம்!

## அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தார்!

திருப்பூர், மார்ச். 6-

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், திருப்பூர் மண்டலத்தின் சார்பில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை மனிதவள மேலாண்மை துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தார்.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் பிரதிவாரம் தோறும் பருத்தி ஏலம் முறை விற்பனை மட்டும் நடைபெற்று வந்தது. தற்போது, தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு விவசாயிகளின் பத்தாண்டு கால கோரிக்கையை ஏற்று மூலனூர் அரசு ஒழுங்கு முறை விற்பனைக்கூட வளாகத்திலேயே முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை மனிதவள மேலாண்மை துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் சிவகுமார், வேளாண்மை துறை அலுவலர் சின்னத் தம்பி, மூலனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர், ஒன்றியக்குழு முன்னாள் துணை தலைவர் ப.பழனிச்சாமி, மேற்கு ஒன்றிய செயலாளர் துரை தமிழரசு, மூலனூர் பேரூராட்சி தலைவர், பேரூர் கழக செயலாளர் மக்கள் க.தெண்டபாணி, கன்னிவாடி பேரூர் செயலாளர் சுரேஷ் உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், விவசாயிகள் பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதில் கலந்து கொண்ட விவசாயிகள் கூறுகையில், "மூலனூர் சுற்று வட்டார பகுதிகளான கன்னிவாடி, எரசனம்பாளையம், முளையாம்பூண்டி, வேளாம்பூன்டி, அரிக்காரன்வலசு, நஞ்சைதலையூர், புஞ்சைதலையர், சுண்டக்காம்பாளையம், புதுப்பை உள்ளிட்ட சுற்று வட்டார கிராமங்களில் அமராவதி பழைய ஆயகட்டு பாசனத் 7 தின் மூலம் நெல் சாகுபடி செய்து வந்தோம்.

விளைவிக்கப்பட்ட நெல்லை புதுப்பை அல்லது வெள்ளகோயில் பகுதிகளில் மட்டும் செயல்பட்டு வந்த அரசு நெல் கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு செல்வதில் போக்குவரத்து. கூடுதல் செலவு என அதிக சுமைகளை கடந்த பல ஆண்டுகளாக சந்தித்தோம். தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எங்களது சிரமங்களை உணர்ந்து கடந்த பத்தாண்டு கால கோரிக்கையை நிறைவேற்றி யுள்ளார், இதனால் நாங்கள் தமிழ்நாடு முதலமைச்சருக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்தனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்டத்தில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளில் பிறந்த குழந்தைகளுக்கு தங்கமோதிரம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி வழங்கினார்!

நாமக்கல் மார்ச் 5

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் மார்ச் 1ஆம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் மார்ச் 1ஆம் தேதி அன்று நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் அரசு மருத்துவமனை மற்றும் சுகாதார மையங்களில் பிறந்த குழந்தைகளுக்கு தங்கமோதிரம் வழங்குவதாக நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி அறிவித்திருந்தார். அதன்படி நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் பிறந்த இரண்டு பெண் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி கலந்து கொண்டு பிறந்த குழந்தைகளுக்கு தங்கமோதிரம் அணிவித்தும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு பெட்டகம் உள்ளிட்டவற்றை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன், நகரக் கழக செயலாளர்கள் திருச்செங்கோடு தா.கார்த்திகேயன், பள்ளிபாளையம் அ.குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் வட்டூர் ஜி.தங்கவேல், எம்.தங்கவேல், ஏ.பி.ஆர்.சண்முகம், செல்வம், நாச்சிமுத்து,, இளங்கோவன், பேரூர் கழக செயலாளர்கள் திருமலை, கார்த்திக் ராஜ், ராமமூர்த்தி, நகர் மன்ற தலைவர்கள் திருச்செங்கோடு நளினி சுரேஷ்பாபு, குமாரபாளையம் டி. விஜய் கண்ணன், மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர், கழகத்தலைவர் அவர்களின் 72 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழிகாட்டுதல்படி,தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன் ஆலோசனைப்படி,பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியம் பி. பள்ளிப்பட்டியில் ஒன்றிய இளைஞரணி அணி துணை அமைப்பாளர்கள் பி.தினேஷ்,தமிழ் நெஞ்சன் ஆகியோர் ஏற்பாட்டில் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் கழக கொடியேற்றி வைத்து கேக்வெட்டி, அன்னதானம் மற்றும் சுமார் 100 பெண்களுக்கு புடவைகள் வழங்கி பொதுமக்களுடன் உறுதிமொழி ஏற்கப்பட்டது.இந்நிகழ்ச்சியில் மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் தாமோதிரன்,கிளைக் கழக செயலாளர்கள் ஜனா,இராஜேந்திரன்,மரியம்சூசை,பெ. சுகந்திரம்,மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் சதா.சுர்ஜித்,செல்வராஜ்,ஒன்றிய கழக நிர்வாகிகள் வே.செல்வன், ஜாகிதா செரீப்,இரவி மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



கோவை தெற்கு மாவட்டம் இளைஞரணி சார்பில் சூலூர் சட்டமன்ற தொகுதி சுல்தான் பேட்டை ஒன்றிய செலக்கரச்சலில் ஒன்றிய அரசின் இந்தித் திணிப்பை எதிர்த்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் , தலைமை கழக செய்தித் தொடர்பு துணை செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி,கழக இளம் பேச்சாளர் பூங்கொடி. கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் கண்டன எழுச்சியுரையாற்றினர். கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சபரி கார்த்திகேயன் தலைமையில், இளைஞர் அணி துணை அமைப்பாளர் உதயபூபதி வரவேற்புரையில், சுல்தான்பேட்டை மேற்கு ஒன்றிய செயலாளர் மகாலிங்கம் முன்னிலையில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் ஜெயப்பிரகாஷ், அமுதபாரதி, முத்துமாணிக்கம், மன்னவன், நித்யா மனோகரன், விஸ்வநாதன்,கவுதமன்,வேலுச்சாமி, பி.எஸ். செல்வராஜ்,விநாயகா பழனிச்சாமி,புஷ்பலதா ராஜகோபால், ஜெயக்குமார், கண்ணன்,கே.பி. பாலசுப்பிரமணியம்,பிரபு, விஜயகுமார், ஜெயலலிதா, சல்மான் நாசர், அப்பாக்குட்டி, தர்மராஜ், மனோகரன், ராஜேந்திரன்,மாரிமுத்து,பானுமதி,காளிமுத்து,ராஜா வேலுச்சாமி, பரமசிவம், மணிமோகன், ரமேஷ், தேவராஜ், சம்பத் துரைசாமி முருகேஷ் சிவப்பிரகாசம் ஆறுமுகம், ஜெயக்குமார், மதன்மோகன்,கோபி, கோகுலகண்ணன், வினோத்குமார் மற்றும் பலர் பங்கேற்றனர். விவேக்குமார் நன்றியுரை கூறினார்.



கரூர் குள்ளம்பட்டியில், துணி நூல் துறை சார்பாக புதிதாக கட்டப்பட்ட சிறிய அளவிலான ஜவுளி பூங்காவினை மின்சாரம், மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, ஆகியோர் திறந்து வைத்து பார்வையிட்டனர். அரசு செயலாளர் வே அமுதவள்ளி, கைத்தறித்துறை இயக்குனர் மகேஸ்வரி ரவிக்குமார், துணி நூல் துறை இயக்குனர் இரா.லலிதா, கரூர் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல், எம்.எல்.ஏ.க்கள் இரா. மாணிக்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன் ஆகியோர் உள்ளனர்.




தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் சேலம் கோட்டம் சார்பில் புதிய வழித்தடம், வழித்தட மாற்றம் மற்றும் வழித்தட நீட்டிப்பு பேருந்து சேவைகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன். சேலம், பழைய பேருந்து நிலையத்திலிருந்து 03.03.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் ஜோசப் டயஸ் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### வேளாங்கண்ணி, வேதாரண்யம்,

# நாகை பகுதிகளில் சுற்றுலா வளர்ச்சி திட்டப் பணிகள்!

## அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் கள ஆய்வு!

நாகை. மார்ச். 6

நாகை மாவட்டம் வேளாங்கண்ணி , வேதாரண்யம், நாகை, நாகூர் பகுதிகளில் சுற்றுலா வளர்ச்சி திட்டங்கள் குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் கள ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின் படி தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத்தலங்களில் வளர்ச்சி பணிகள் மிக சிறப்பாக திட்டமிடப்பட்டு செய்யப்படுததப்பட்டு வருகின்றன. நாகப்பட்டிடனம் மாவட்டத்தில் வேளாங்கண்ணி செருதூர் வெள்ளாற்றில் சுற்றுலாப்பயணிகளின் பொழுது போக்கிற்காக படகு சவாரியை அறிமுகப்படுத்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் ஆய்வு செய்து தேர்வு செய்யப்பட்ட இடத்தினையும், கீழையூர் கிழக்கு ஒன்றியம் வேளாங்கண்ணி அருகே உள்ள பிரதாபராமபுரம் ஊராட்சி செருதூர் கிராமத்தில் சுற்றுச்சூழல் மற்றும் கிராமிய சுற்றுலாத் திட்டத்தில் உண்டி உறையுள், மிதிவண்டி பாதைகள், கைவினை பட்டறைகள் மற்றும் கலாச்சார நிகழ்வுகள், ஏரி முகப்பு மற்றும் கலாச்சார நிகழ்வுகள், ஏரி முகப்பு மேம்பாடு மற்றும் படகு சவாரி, பூவை கடற்கரையில் மேம்பாடு மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி ஆகியவற்றிற்கு ரூ. 1 கோடி மதிப்பில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

இத்திட்டத்திற்காக இடங்களை கள ஆய்வு மேற்கொண்ட பின்னர் வேதாரண்யத்தில் வேதபுரீஸ்வரர் கோவிலைச் சுற்று சிமெண்ட் சாலை அமைக்க ரூ. 5.44 கோடி மதிப்பீட்டிலும், வேதாமிர்தம் ஏரியில் படகு சவாரிக்கு ரூ. 2 கோடி மதிப்பிட்டிலும், வேதாரண்யம் நகராட்சியால் திட்டங்கள் தயாரிக்கப்பட்ட இடங்களையும், புகழ்பெற்ற பறவைகள் சரணாலயமான கோடியக்கட்டில் சாலை மேம்பாடு, காட்சிகோபுரம், தொலை நோக்கி கருவியுடன் கூடிய பார்வையாளர் மாடம் மற்றும் வழிகாட்டி பலகைகள் ஆகிய வசதிகளை ஏற்படுத்த வனத்துறை ரூ. 1 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரித்து வருவதனையும், சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் கள ஆய்வு மேற்கொண்டார். அதைத் தொடர்ந்து நாகையில் அமைந்துள்ள புராதான டச்சு கல்லறைக்கு அருகில் சுற்றுவட்டப்பயணிகளுக்கு ரூ.50 லட்சத்தில் அணுகு சாலை, கழிப்பறைகள், வழிகாட்டி பலகைகள் மற்றும் குடிநீர் வசதிகள் ஏற்பாடு செய்வது குறித்தும், நாகை பழைய மற்றும் புதிய கடற்கரை பகுதிகளையும், நாகை நகரட்சி யில் ரூ. 80 லட்சத்திற்கான பழைய கடற்கரை பகுதியில் சுற்றுலாப் பயணிகள் பொழுது போக்கிற்காக பூங்கா அமைக்க திட்டம் தயாரித்து வருவதையும், நாகூர் தர்காவை சுற்றி பேவர்பிளாக் அமைத்தல், இரு சக்கர வாகன நிறுத்துமிடம், யாத்திரிகள் காத்திருப்பு மண்டபம் மற்றும் பேருந்து நிலைய மேம்பாடு போன்றவற்றிக்கு ரூ. 4 கோடி மதிப்பீட்டில் நாகை நகரட்சி திட்டங்கள் தயாரித்து வருவதையும், சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் கள ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், நாகை மாவட்ட வன அலுவலர் அபிஷேக்தோமர், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேக நாதன், நாகை நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்ற தலைவர் இரா.மாரிமுத்து, வேதாரண்யம் நகரக் கழகச் செயலாளரும், நகர் மன்ற தலைவர் மா.மீ.புகழேந்தி, கீழையூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளரும், வேளாங்கண்ணி பேருராட்சி துணைத் தலைவர் ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன், வேதாரண்யம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் என்.சதாசிவம், வேதாரண்யம் மேற்கு ஒன்றியச் செயலாளர் உதயம் வே. முருகையன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ், வேளாங்கணி பேரூராட்சி தலைவர் டயானாஷ்ர்மிளா, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் திருச்சி உதவி செயற்பொறியாளர் இரத்தினவேல், திருச்சி மண்டல மேலாளர் பிரபுதாஸ் தி.மு.க. மாவட்ட சுற்று சூழல் அணி அமைப்பாளர் க.சத்தியமூர்த்தி, மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் சம்பத், மாவட்ட வழக்கறிஞர் அணி மா.மி. அன்பரசு, மாவட்ட சிறுப்பான்மை நல உரிமை பிரிவு அணி துணை அமைப்பாளர் நாசர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கோடியக்கரை சுப்பரமணி, கோடியக்காடு தமிழ்மணி, மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் அஞ்சாப்பிளைளை மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு மாநில அயலக அணியின் செயலாளர் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா ஆணைக்கிணங்க புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் வழிகாட்டுதலின்படி புதுக்கோட்டை வடக்கு மாவட்ட அயலக அணியின் சார்பில் மாவட்ட அமைப்பாளர் கவிவேந்தன் ஏற்பாட்டில், மாநகர அவைத்தலைவர் அ.ரெத்தினம் தலைமையில் புதுக்கோட்டை மாநகராட்சி சந்தைப்பேட்டையில் அமைந்துள்ள நேசக்கரம் ஆதரவற்றோர் இல்லத்தில் காலை உணவு வழங்கப்பட்டது. நிகழ்வில் மாவட்ட அயலக அணியின் தலைவர் செந்தில், துணை அமைப்பாளர்கள் செல்வராஜ், டிங்கர் குமார், மாநகர துணை செயலாளர் வட்டக் கழகச் செயலாளர்கள் ரவிச்சந்திரன்,தியாகு, சுரேஷ்குமார் மற்றும் ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, து. களத்தூர் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கி, கிளைக் கழகம் சார்பில் கழக கொடியேற்றி, சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் தலைமையில், 2026ல் 200 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்ற உறுதி மொழி ஏற்கப்பட்டது. இதில் ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் மருத்துவர் செ.வல்லபன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இரா.அருண் , மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் து. களத்தூர் கண்ணபிரான் மற்றும் கிளை கழக நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளனர்.